செ.வெ.எண்:498 நாள்: 03.08.2020

**வீடு, தோட்டங்களில் நஞ்சில்லா காய்கறி உற்பத்தி செய்ய 40 சதவிகித மானியத்தில் காய்கறி விதைகள்.**

**மாவட்டஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப.,அவர்கள் தகவல்.**

---

வீடு, தோட்டங்களில் நஞ்சில்லா காய்கறி உற்பத்தி செய்ய 40 சதவிகித மானியத்தில் காய்கறி விதைகள் தோட்டக்கலைத்துறையின் மூலம் வழங்கப்பட உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்ததாவது.

தமிழக அரசு தோட்டக்கலைத் துறையின் மூலம் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில் நஞ்சில்லா காய்கறி உற்பத்தியினை அதிகரிக்கும் நோக்கில் ஆடி பட்டம் காய்கறி சாகுபடி முனைப்பு இயக்கத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. காய்கறி சாகுபடியினை அதிகரிக்கவும், வீட்டுப்புற பகுதிகளில் குறைந்த பரப்பில் காய்கறி சாகுபடியினை ஊக்குவிக்கும் வகையிலும் இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது.

புதுக்கோட்டை மாவட்டத்தில் 10,000 எண்ணிக்கையில் காய்கறி சிறு தளைகள் நடப்பாண்டில் விநியோகம் செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதில் ஒவ்வொரு தளையிலும் வெண்டை விதைகள்-3கிராம், அவரை விதைகள்-1கிராம், தட்டைபயறு விதைகள்-2கிராம், கொத்தவரை விதைகள்-2கிராம், கத்தரி விதைகள்-2கிராம் என ரூ.25 மதிப்புடைய ஐந்து வகையான காய்கறி விதைகள் 40 சதவிகித மானியத்தில் வழங்கப்பட உள்ளது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்பும் பயனாளிகள் தோட்டக்கலைத்துறை அலுவலர்களால் வழங்கப்படும் விண்ணப்பத்துடன் ஆதார் கார்டு அல்லது குடும்ப அட்டை அல்லது வீட்டுவரி இரசீது ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றினை வழங்கி 40 சதவீகித மானியத்தில் விதைகளை பெற்று தங்கள் வீடு மற்றும் தோட்டங்களில் உள்ள இடங்களில் சாகுபடி செய்து நஞ்சில்லா காய்கறிகளை உற்பத்தி செய்து பயன்பெறலாம். இது குறித்த மேலும் விபரங்களுக்கு அருகில் உள்ள வட்டார தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அல்லது தோட்டக்கலை உதவி இயக்குநர் (நடவு பொருள்) அவர்களின் 7094382390 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி,இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்தார்.

---

**செய்திவெளியீடு - செய்திமக்கள் தொடர்புஅலுவலகம்,புதுக்கோட்டை**